Ref: AHCL/2026-27/C039 August 29, 2026

BSE Limited
Phiroze Jeejeebhoy Towers,
Dalal Street,
Mumbai - 400 001

Scrip Code – **544350**

National Stock Exchange of India Limited
Exchange Plaza, Plot No C/1, G Block,
Bandra-Kurla Complex, Bandra (E),
Mumbai – 400 051

Symbol : **AGARWALEYE**

Dear Sir / Madam,

Sub: Newspaper Advertisement – Sixteenth Annual General Meeting of Dr. Agarwal's Health Care Limited, Instructions for e-Voting and Other Related Information

Ref: Regulation 30 read with Schedule III of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015

Pursuant to the captioned subject, reference and our letter dated August 28, 2026, intimating the electronic dispatch of the Notice convening the Sixteenth Annual General Meeting ('AGM') of Dr. Agarwal's Health Care Limited on **Monday, September 21, 2026, at 10:00 A.M.** IST through Video Conferencing / Other Audio Visual Means, the copies of the newspaper advertisements in relation to the aforesaid Notice, published today, i.e. August 29, 2026, in **Financial Express** (English) and **Makkal Kural** (Tamil), are **enclosed herewith.**

The Notice convening the aforementioned Sixteenth Annual General Meeting, is also made available on the Company's website at: www.dragarwals.co.in.

We request you to kindly take the above on record.

For **Dr. Agarwal's Health Care Limited**

Thanikainathan A
Digitally signed by Thanikainathan A
Date: 2026.08.29 15:08:50 +05'30'

Thanikainathan Arumugam
Company Secretary and Compliance Officer

Encl.: as above.

சென்னை மெட்ரோ ரெயில் திட்டம்: கிளாம்பாக்கத்தில் இருந்து செங்கல்பட்டு வரை விரிவாக்கம் செய்ய திட்ட அறிக்கை

சட்டசபையில் அமைச்சர் ரமேஷ் தகவல்

சென்னை, ஆக. 29–

சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தை கிளாம்பாக்கத்தில் இருந்து செங்கல்பட்டு வரை விரிவாக்கம் செய்வதற்கான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சட்டசபையில் அமைச்சர் ரமேஷ் கூறினார்.

தமிழக சட்டசபையில் நேற்று சிறப்பு முயற்சிகள் துறை (சென்னை மெட்ரோ ரெயில் திட்டம்) என்ற முதலமைச்சர் துறையின் மானியக் கோரிக்கைகள் மீது எம்.எல்.ஏ.க்கள் பேசினர்.

அதற்கு முதலமைச்சர் விஜய்க்கு பதிலாக இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் பதிலளித்தார். அவர் கூறியதாவது:–

சென்னை மெட்ரோ ரெயில் 2–ம் கட்ட திட்டமானது ரூ.63,246 கோடி செலவில் 118.9 கி.மீ. நீளத்திற்கு 3 வழித்தடங்களில் ஒரே கட்டமாக உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாதவரம் – சிறுசேரி சிப்காட், கலங்கரை விளக்கம் – பூந்தமல்லி புறவழிச் சாலை, மாதவரம் – சோழிங்கநல்லூர் ஆகிய 3 முக்கிய வழித்தடங்களை இது இணைக்கும். மொத்தம் 128 மெட்ரோ ரெயில் நிலையங்கள் இந்த வழித்தடத்தில் அமைகின்றன.

எதிர்கால விரிவாக்கத்திற்கும் அரசு திட்டமிட்டுள்ளது. அதன்படி, விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் பஸ் முனையம் வரையிலும், பூந்தமல்லி புறவழிச்சாலை முதல் ஸ்ரீபெரும்புதூர் வழியாக சுங்குவார் சத்திரம் வரையிலும், கோயம்பேட்டில் இருந்து அம்பத்தூர், ஆவடி வழியாக பட்டாபிராம் வரை போன்ற விரிவாக்க திட்டங்களும் இதில் அடங்கியுள்ளது.

கடந்த ஜூன் மாதம் முக்கியமான சில வழித்தடங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அதில், விம்கோநகர் முதல் அசிசிநகர் வரையிலான திட்ட அறிக்கைக்கான அரசாணை, கிளாம்பாக்கம் பஸ் முனையத்தில் இருந்து செங்கல்பட்டு வரையிலான விரிவாக்கம், மாமல்லபுரம் முதல் சென்னை சென்ட்ரல் வரை, சிறுசேரி சிப்காட்– 2 முதல் முட்டுக்காடு சர்வதேச கூட்டரங்கு மையம் வரையிலான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு தொடர்பான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்த ஆட்சியில் இவை அனைத்தும் செயல்பாட்டுக்கு வரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

கூடுதல் கட்டண புகாருக்கு தீர்வு: ஆட்டோ, டாக்சிக்கு டிஜிட்டல் மீட்டர் செயலி

அமைச்சர் ராஜ்குமார் அறிவிப்பு

சென்னை, ஆக.29–

கூடுதல் கட்டண புகாருக்கு தீர்வு காணும் வகையில் சென்னையில் ஆட்டோ, டாக்சிக்கு டிஜிட்டல் மீட்டர் செயலி அறிமுகம் செய்யப்படும் என சட்டசபையில் அறிவிக்கப்பட்டது.

சட்டசபையில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை மானியக்கோரிக்கையின் போது அமைச்சர் ராஜ்குமார் சென்னைக்கு அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள் விவரம் வருமாறு:–

★ சென்னை சாத்தங்காடு இரும்பு சந்தை வளாகம் மற்றும் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் உள்ள சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகள் ரூ.20 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்படும்.

★ கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடியில் காய்கறி அங்காடியின் எல்.எம். மற்றும் என் (பிளாக்) தொகுதிகளுக்கு இடைப்பட்ட 22,000 சதுர அடி, பரப்பளவில், ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் புதிய கடைகள் கட்டப்படும்.

★ கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வணிகர்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று, ஒவ்வொரு கடைக்கும் பிரத்யேக குடிநீர் இணைப்புகள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

★ சென்னை பெரம்பூரில் சாலையோரங்கள், இதர ஆட்சேபகரமான பகுதிகளில் வசிக்கும் மற்றும் ஏழை எளிய வீடற்ற குடும்பங்களுக்காக 462 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.111.08 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டப்படும்.

★ சென்னையில் ஆட்டோ மற்றும் டாக்சி ஓட்டுநர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், ஆட்டோ, டாக்சி பயணிகளுக்கு நியாயமான பயணத்தொகையை உறுதி செய்யவும் டிஜிட்டல் மீட்டர் உள்ளடக்கிய ஆட்டோ, டாக்சி செயலி, சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பால் உருவாக்கப்பட்டு அறிமுகம் செய்யப்படும். இதன்மூலம் கூடுதல் கட்டண புகாருக்கு தீர்வு காணப்படும்.

★ விரிவாக்கப்பட்ட சென்னை பெருநகர பகுதியில் திட்டமிட்ட நகர வளர்ச்சியை உறுதி செய்யவும், எதிர்காலத்தில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கவும், மேலும் தடையற்ற போக்குவரத்து இயக்கத்தை உறுதி செய்யவும் சாலை வலை மைப்பு திட்டம் ரூ.12 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்படும்.

★ தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் சென்னை மாநகர் சி.ஐ.டி. நகரில் சுமார் ரூ.18 கோடி மதிப்பீட்டில் 20 குடியிருப்பு கள் வாரிய வாடகை குடியிருப்பு திட்டத்தின் கீழ் கட்டப்படும்.

செங்கல்பட்டு மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக குறைதீர் கூட்டரங்கில் நடைபெற்ற விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து 130 மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட கலெக்டர் மு.வீரப்பன், இம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். முந்தைய விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அவர் கேட்டறிந்தார்.

ஒட அறிவிப்பு

SRI LAKSHMI PLOT NO.11&12, SOMANGALAM MAIN ROAD, PUDUNALLUR, CHENNAI-69. என்ற விலாசத்தில் உள்ள ஆடி கடையில் 1/1/2024 முதல் 31/5/2025 வரை தேதியிலான ஆடி வைத்து மீட்கப்படாத நகைகள் வெளியே ஏலம் விடப்படும் நாள் 16/9/2026 அன்று காலை 11.00 A.M மணியளவில் SRI LAKSHMI PLOT NO.11&12, SOMANGALAM MAIN ROAD, PUDUNALLUR, CHENNAI-69. என்ற விலாசத்தில் வெளிப்படையாக ஏலம் ஆடிக்கு ஸ்ரீபெரும்புதூர் முனை வட்டார முன்னிலையில் ஏலம் போடப்படும்.

ENROLLMENT NOTICE

After ten days of the publication of this notice and within three months thereafter, I, Sree Lekshmi V R, D/o Vigneswaran Nair, Aged - 36 Years, Permanently Residing at - F4, Madhurams Apartment, 4th Street, Opposite Old Tower Block, Nandanam Extension, Chennai, Tamil Nadu - 600035, intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu & Puducherry, High Court Campus, Chennai - 600104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

SREE LEKSHMI V R

பெயர் மாற்றம்

SATHYA NARAYANAN RAGHAVACHARI VENKIPURAM த/பெ. RAGHAVACHARI, பிறந்த தேதி : 01/03/1963, எண் : 51/64, ஆணைக்கட்டி தெரு, காஞ்சிபுரம், 631 501, தமிழ்நாடு என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி SATHYANARAYANAN VANKEEPURAM என்று அழைக்கப்படுகின்றேன் .

SATHYANARAYANAN RAGHAVACHARI VENKIPURAM

பெயர் மாற்றம்

HAMAVATHY MADHAN, க/பெ. மதன் , பிறந்த தேதி : 10/06/198, எண்: 79/31/1, டி.எஸ் பழனிவேல் தெரு, செய்யார், திருவத்திபுரம் அஞ்சல், திருவண்ணாமலை மாவட்டம , 604407, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி HEMAVATHY PEMMASANI என்று அழைக்கப்படுகின்றேன்.

HEMAVATHY MADHAN

பெயர் மாற்றம்

MERCY MYSTICA SANJANA, தந்தை பெயர்:John Michael Raj, பிறந்த தேதி: 28/12/1998 (சொந்த ஊர்: Chennai, Tamilnadu) residing at No.23, Avvai 2 Cross Street, Selaiyur,, Chennai, Tamilnadu-600073 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New Given Name :MERCY MYSTICA SANJANA New Surname :JOHN MICHAEL RAJ** என்று அழைக்க படுகிறேன்.

MERCY MYSTICA SANJANA

SALONA COTSPIN LIMITED

CIN - L17111TZ1994PLC004797

Registered Office : SF NO 74/12 & 75/3 Sathy Road, Pungampalli Village, Sathyamangalam – 638402

Website – www.salonacotspin.com Phone – 0422-2454415

32-வது வருடாந்திர பொதுக் கூட்டம், மின்னணு வாக்குப் பதிவு தகவல் மற்றும் பொதுக் கூட்ட அறிவிப்பு

இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றில், சலோனா காட்ஸ்பின் லிமிடெட் நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கான 32வது ஆண்டு பொதுக்கூட்டம் ("AGM"), 23 செப்டம்பர் 2026, புதன்கிழமை காலை 11:00 மணிக்கு (IST), காணொலி கூட்டம் ("VC")/பிற ஒலி–ஒளி வழிமுறைகள் ("OAVM") மூலம் நடைபெறும். இக்கூட்டத்தில், 13 ஆகஸ்ட் 2026 தேதியிட்ட ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்கள் பரிவர்த்தனை செய்யப்படும். இக்கூட்டம் நிறுவனங்கள் சட்டம், 2013 மற்றும் இந்திய பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015, மேலும் நிறுவன விவகாரங்கள் அமைச்சகம் (MCA) மற்றும் இந்திய பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) ஆகியவற்றால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கைகளுடன் இணங்க நடைபெறும்.

MCA சுற்றறிக்கைகள் மற்றும் பட்டியலிடல் விதிமுறைகளுக்கு இணங்க, 2025–2026 நிதியாண்டிற்கான ஆண்டு அறிக்கை, ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்புடன், 14 ஆகஸ்ட் 2026 அன்று நிறுவனத்தில்/பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடம் (RTA) / வைப்பகங்களில் மின்னஞ்சல் முகவரி பதிவு செய்யப்பட்டிருந்த உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கையை அனுப்பும் செயல்முறை 28 ஆகஸ்ட் 2026 அன்று நிறைவு செய்யப்பட்டது.

மேலும், இந்திய பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015–ன் விதிமுறை 36(1)(b)–க்கு இணங்க, தங்களது மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத பங்குதாரர்களுக்கு, ஆண்டு அறிக்கையின் முழுமையான விவரங்களுடன் கூடிய அறிவிப்பில் கிடைக்கும் இணையதள இணைப்பு மற்றும் அந்த இணையதளத்தில் அதற்கான சரியான பாதை ஆகியவற்றை நிறுவனம் கடிதம் மூலம் அனுப்பியுள்ளது.

32வது ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கை, நிறுவனத்தின் இணையதளமான www.salonacotspin.com/investors/–ல் நிதித் தகவல்கள் > ஆண்டு அறிக்கைகள் > 2025–2026 என்ற பிரிவில் கிடைக்கிறது. மேலும், நிறுவனத்தின் பங்கு பத்திரங்கள் பட்டியலிடப்பட்டுள்ள பங்குச் சந்தையான NSE Limited ("NSE")–ன் இணையதளமான www.nseindia.com–ன் தொடர்புடைய பிரிவுகளிலும் இதனை அணுகலாம். இதேபோல், Central Depository Services (India) Limited–ன் இணையதளமான www.evotingindia.com–லும் இது கிடைக்கிறது.

முக்கிய விவரங்கள்:

வரிசை எண்	விவரம்	தகவல்
1	ஆண்டு பொதுக்கூட்டம் நடைபெறும் நாள், தேதி மற்றும் நேரம்	புதன்கிழமை, 23 செப்டம்பர் 2026, காலை 11:00 மணி (IST)
2	ஆண்டு பொதுக்கூட்டம் நடைபெறும் முறை காணொலி மாநாடு / பிற ஒலி–ஒளி வழிமுறைகள்	(VC/OAVM)
3	மின்னணு வாக்குப்பதிவிற்கான தகுதி நிர்ணய தேதி	16 செப்டம்பர் 2026
4	மின்னணு வாக்குப்பதிவு எண் (EVSN)	260817020
5	மின்னணு வாக்குப்பதிவு தொடங்கும் தேதி	20 செப்டம்பர் 2026, காலை 9:00 மணி முதல்
6	மின்னணு வாக்குப்பதிவு முடிவு	தேதி22 செப்டம்பர் 2026, மாலை 5:00 மணி

QR Code for CDSL E-Voting	QR Code for NSDL E-Voting	அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கை

நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 108, அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்ட நிறுவனங்கள் (நிர்வாகம் மற்றும் மேலாண்மை) விதிகள், 2014–ன் விதி 20, மற்றும் பட்டியலிடல் விதிமுறைகளின் விதிமுறை 44 ஆகியவற்றிற்கு இணங்க, ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களுக்கும் உறுப்பினர்கள் தங்களது வாக்குகளை CDSL வழங்கும் தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு முறையின் ("remote e-voting") மூலம் செலுத்தும் வசதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஆண்டு பொதுக்கூட்டம் நடைபெறும் நேரத்தில் மின்னணு வாக்குப்பதிவு முறையின் ("e-voting") மூலம் வாக்களிக்கும் வசதியையும் நிறுவனம் வழங்குகிறது. தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு/மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான விரிவான நடைமுறை ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள், ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி, காணொலி கூட்டம் / பிற ஒலி–ஒளி வழிமுறைகள் (VC/OAVM) மூலம் மட்டுமே ஆண்டு பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பங்கேற்க முடியும்.

நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு, M/s. S. Krishnamoorthy & Co., பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் பங்குதாரரான திரு. B. Krishnamoorthi, FCA அவர்களை, வாக்குப்பதிவு செயல்முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் ஆய்வு செய்வதற்கான வாக்கு ஆய்வாளராக (Scrutinizer) நியமித்துள்ளது.

VC/OAVM வசதி மூலம் ஆண்டு பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, தீர்மானங்கள் தொடர்பாக தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்காதவர்களும், அவ்வாறு வாக்களிப்பதில் இருந்து சட்டரீதியாகத் தடை செய்யப்படாதவர்களும், ஆண்டு பொதுக்கூட்டம் நடைபெறும் நேரத்தில் மின்னணு வாக்குப்பதிவு முறையின் மூலம் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள். ஒருவர் தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு மூலம் தனது வாக்கினை பயன்படுத்திய பின்னரும் ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கேற்கலாம்; ஆனால் கூட்டத்தின் போது மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்.

வாக்குப்பதிவிற்கான தகுதி நிர்ணய தேதியான 16 செப்டம்பர் 2026, புதன்கிழமை அன்று, உறுப்பினர்கள் பதிவேட்டில் அல்லது வைப்பகங்கள் பராமரிக்கும் பயனாளர் உரிமையாளர்கள் பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள நபர்கள் தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு அல்லது ஆண்டு பொதுக்கூட்டத்தில் வாக்களிக்கும் வசதியை பயன்படுத்த தகுதியுடையவர்கள். உறுப்பினர்களின் வாக்குரிமை, தகுதி நிர்ணய தேதியன்று நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் அவர்கள் வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப இருக்கும்.

நிறுவனம் மின்னணு முறையில் ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பை அனுப்பிய பின்னர் நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று உறுப்பினரானவர், தகுதி நிர்ணய தேதியன்று பங்குகளை வைத்திருக்கும் நபர், www.evotingindia.com என்ற இணையதளத்திற்கு கோரிக்கை அனுப்பி உள்நுழைவு அடையாள எண் மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம். இருப்பினும், அவர் ஏற்கனவே CDSL–ல் தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவிற்காகப் பதிவு செய்திருந்தால், ஏற்கனவே உள்ள பயனர் அடையாள எண் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி வாக்களிக்கலாம்.

பங்குதாரரின் மின்னஞ்சல் முகவரி ஏற்கனவே நிறுவனம் / அதன் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் (RTA) / வைப்பகங்களில் பதிவு செய்யப்பட்டிருந்தால், மின்னணு வாக்குப்பதிவிற்கான உள்நுழைவு விவரங்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.

தாள்வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் அல்லது நிறுவனத்துடன் தங்களது மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத பங்குதாரர்கள், ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு மூலமாகவோ அல்லது ஆண்டு பொதுக்கூட்டம் நடைபெறும் நேரத்தில் மின்னணு வாக்குப்பதிவு முறையின் மூலமாகவோ தங்களது வாக்குகளை செலுத்தலாம்.

மேலும், இந்திய பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015–ல் செய்யப்பட்ட திருத்தத்தின் அடிப்படையில், விதிமுறை 12 மற்றும் அட்டவணை–I–ல் செய்யப்பட்ட மாற்றங்களின்படி, ஈவுத்தொகை வாரண்ட்கள் (Dividend Warrants) வழங்குவது தொடர்பான விதிகள் 18 நவம்பர் 2025 முதல் நீக்கப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம்.

எதிர்காலத்தில் வழங்கப்படும் அனைத்து ஈவுத்தொகைத் தொகைகளும், இந்திய ரிசர்வ் வங்கி அங்கீகரித்த மின்னணு பணப்பரிவர்த்தனை முறையின் மூலம் மட்டுமே செலுத்தப்படும். நிறுவனம் இனிமேல் ஈவுத்தொகை வாரண்ட்கள் என்படும் தாள்வடிவ முறையில் ஈவுத்தொகையைச் செலுத்தாது

தங்களது வங்கிக் கணக்கு விவரங்களைப் பதிவு செய்யாத அல்லது புதுப்பிக்காத பங்குதாரர்கள், அந்த விவரங்கள் முறையாகப் பதிவு / புதுப்பிக்கப்படும் வரை ஈவுத்தொகையைப் பெற முடியாது.

Demat வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள், தங்களது தொடர்புடைய வைப்பகப் பங்கேற்பாளர் (Depository Participant) அறிவுறுத்திய நடைமுறைக்கு ஏற்ப, தங்களது மின்னணு பங்கு கணக்கில் வங்கிக் கணக்கு விவரங்களை பதிவு / புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தாள்வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள், நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான MUFG Intime India Private Limited நிறுவனத்திடம், பரிந்துரைக்கப்பட்ட Form ISR-1 மற்றும் பிற தொடர்புடைய படிவங்களைச் சமர்ப்பித்து, தங்களது வங்கிக் கணக்கு விவரங்களைப் பதிவு/புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தொடர்புக்கு: investor.helpdesk@in.mpms.mufg.com.

பரிந்துரைக்கப்பட்ட படிவங்களை நிறுவனத்தின் இணையதளத்தில் உள்ள முதலீட்டாளர் பதிவிறக்கங்கள் பகுதியில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்: https://www.salonacotspin.com/investor-downloads.

தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் இருந்தால், www.evotingindia.com இணையதளத்தின் பதிவிறக்கப் பகுதியில் பங்குதாரர்களுக்காக வழங்கப்பட்டுள்ள அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் மின்னணு வாக்குப்பதிவு பயனர் கையேடு ஆகியவற்றைப் பார்க்கலாம். அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதலாம் அல்லது கட்டணமில்லா தொலைபேசி எண் 1800-21-09911-ஐத் தொடர்புகொள்ளலாம்.

மின்னணு முறையில் வாக்களிப்பதற்கான வசதி தொடர்பாக ஏதேனும் குறைகள் இருந்தால், CDSL நிறுவனத்தின் மூத்த மேலாளர் திரு. ராகேஷ் தல்வி அவர்களை helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

இதன்மூலம் மேலும் அறிவிக்கப்படுவது என்னவென்றில், ஆண்டு பொதுக்கூட்டம் மற்றும் ஈவுத்தொகை செலுத்துதல் தொடர்பாக, நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்றப் பதிவேடுகள், 17 செப்டம்பர் 2026, வியாழக்கிழமை முதல் 23 செப்டம்பர் 2026, புதன்கிழமை வரை (இரு நாட்களும் உட்பட) மூடப்பட்டிருக்கும்.

2025–26 நிதியாண்டிற்கான ஈவுத்தொகை, ஆண்டு பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டால், 16 செப்டம்பர் 2026, புதன்கிழமை அன்று வணிக நேரம் முடிவடையும் நிலையில், உறுப்பினர்கள் பதிவேட்டில் பெயர் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களுக்கும், வைப்பகங்கள் வழங்கிய விவரங்களின்படி பங்குகளின் பயனாளர் உரிமையாளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள நபர்களுக்கும் வழங்கப்படும்.

சலோனா காட்ஸ்பின் லிமிடெட்

Sd/-

ராஜ்குமாரி ரா

நிறுவன செயலாளர்

இடம்: கோயம்புத்தூர்

தேதி : ஆகஸ்ட் 29, 2026

Dr. அகர்வால்ஸ் ஹெல்த் கேர் லிமிடெட்

CIN : L85100TN2010PLC075403

பதிவு அலுவலகம்: 6வது தளம், மேனன் எட்டர்னிட்டி, 1வது பிரதான சாலை, ஆஸ்டின் நகர், ஆழ்வார்பேட்டை, சென்னை - 600018.

தொலைபேசி எண் : 91-44-43787777 | இணையதளம் : www.dragarwals.co.in | மின்னஞ்சல் : secretarial@dragarwal.com

கம்பெனியின் 16வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தை கூட்டுவதற்கான உறுப்பினர்களுக்கான அறிவிப்பு, மின்னணு வாக்குப்பதிவு மற்றும் பிற தொடர்புடைய தகவல்களுக்கான அறிவுறுத்தல்கள்

கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள பல்வேறு சுற்றறிக்கைகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ள கட்டமைப்பிற்கு இணங்கவும், நிறுவனங்கள் சட்டம் 2013-ன் பொருந்தக்கூடிய விதிகள், இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 மற்றும் அவற்றின் கீழ் முறையே உருவாக்கப்பட்ட/வெளியிடப்பட்ட விதிகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்கவும், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கான பதினாறாவது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM), **திங்கள்கிழமை, செப்டம்பர் 21, 2026 அன்று காலை 10:00 மணிக்கு** (இந்திய நேரப்படி) **காணொளி காட்சி** (VC) / **பிற ஆடியோ காட்சி வழிமுறை** (OAVM) மூலமாக நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஆகஸ்ட் 21, 2026 வெள்ளிக்கிழமை நிலவரப்படி, நிறுவனம் / பதிவாளர் மற்றும் பங்குப் பரிமாற்ற முகவர் ஆகியோரிடம் தங்களது மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்துள்ள மற்றும் டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் உறுப்பினர்கள் பதிவேடு / பலனடையும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களுக்கு, மேற்கூறிய பதினாறாவது வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கான அறிவிப்பு மற்றும் 2025-26 நிதியாண்டிற்கான நிறுவனத்தின் ஆண்டு அறிக்கை ஆகியவை ஆகஸ்ட் 28, 2026 வெள்ளிக்கிழமை அன்று மின்னணு முறையில் அனுப்பி வைக்கப்பட்டன. கொடுக்கப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் இந்த அறிவிப்பை அணுகலாம்:

மேற்கண்டவாறு மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத உறுப்பினர்களைப் பொறுத்தவரை, நிறுவனத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள கூட்டத்தின் அறிவிப்பிற்கான இணைய இணைப்பு (web link) மற்றும் நிலையான க்யூஆர் குறியீடு (static QR code) மற்றும் அதனை அணுகுவதற்கான தேவையான வழிமுறைகளுடன் தகவல் தபால் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. தங்களது மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள், தங்களது டீமேட் (demat) கணக்குகளைப் பராமரிக்கும் டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் அதனைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த அறிவிப்பு கீழ்க்கண்ட இணையதளங்களில் கிடைக்கிறது: (I) நிறுவனத்தின் இணையதளம்: www.dragarwals.co.in, (II) பங்குச் சந்தைகள், அதாவது BSE லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் இணையதளங்கள்: முறையே www.bseindia.com மற்றும் www.nseindia.com; மற்றும் (III) நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (மின்னணு-வாக்களிப்பு வசதியை வழங்கும் முகமை) இணையதளம்:www.evoting.nsdl.com

தொலைதூரமின்னணு-வாக்களிப்பு மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் (AGM) போது மின்னணு-வாக்களிப்பு:

காணொளி காட்சி (VC) / பிற ஆடியோ காட்சி வழிமுறை (OAVM) மூலமாக 16-வது வருடாந்திர பொதுக் கூட்டத்தை (AGM) நடத்துவதற்கும், கூட்டுவதற்கும் மற்றும் மின்னணு-வாக்களிப்பு (தொலைதூர மற்றும் நடைபெறும் இடம்) செயல் முறையை எளிதாக்குவதற்கும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) நிறுவனத்தின் சேவைகளை நிறுவனம் பெற்றுள்ளது.

மின்னணு வாக்குப்பதிவு தகுதிக்கான காலம்	செவ்வாய்க்கிழமை செப்டம்பர் 15, 2026
மின்னணு வாக்குப்பதிவு துவங்கும் காலம்	செப்டம்பர் 17, 2026 வியாழக்கிழமை (காலை 9:00 மணி) இந்திய நேரப்படி தொடங்குகிறது.
மின்னணு வாக்குப்பதிவு முடியும் காலம்	செப்டம்பர் 20, 2026 ஞாயிற்றுக்கிழமை (மாலை 5:00 மணி) இந்திய நேரப்படி முடிவடைகிறது.

தொலைதூர மின்னணு-வாக்களிப்பு வசதி பின்வரும் காலகட்டத்தில் கிடைக்கும்:

டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் உறுப்பினர்கள் பதிவேடு / பலனடையும் உரிமையாளர்களின் பதிவேட்டில், **செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 15, 2026,** அதாவது கட்ஆஃப் தேதி (Cut - Off Date) நிலவரப்படி, யாருடைய பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளதோ, அந்த நபர் மட்டுமே மின்னணு-வாக்களிப்பில் பங்கேற்க உரிமை பெற்றுள்ளார். கட்ஆஃப்தேதி நிலவரப்படி உறுப்பினராக இல்லாத ஒரு நபர், இந்த அறிவிப்பை தகவலுக்காக மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும். ஞாயிற்றுக்கிழமை, செப்டம்பர் 20, 2026 அன்று மாலை 5.00 மணி (இந்திய நேரப்படி)க்குப் பிறகு உடனடியாக தொலைதூர மின்னணு-வாக்களிப்பு வசதி முடக்கப்படும், அதன்பின்னர் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டாது.

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி, உறுப்பினர்கள் கூட்டம் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்ட நேரத்திற்கு 15 நிமிடங்களுக்கு முன்பும் பின்பும் VC/OAVM முறை மூலமாக AGM-ல் இணையலாம். VC/OAVM வசதி மூலமாக AGM-ல் கலந்துகொள்ளும் உறுப்பினர்களில், தொலைதூரமின்னணு-வாக்களிப்பு மூலம் தீர்மானங்கள் மீது ஏற்கனவே தங்களது வாக்கை (வாக்குகளை) பதிவு செய்யாதவர்கள் மற்றும் வேறு விதமாக வாக்களிக்க தடை செய்யப்படாதவர்கள் மட்டுமே, திங்கள்கிழமை, செப்டம்பர் 21, 2026 அன்று AGM-ல் கிடைக்கும் மின்னணு-வாக்களிப்பு அமைப்பு வசதி மூலமாக தங்களது வாக்கை (வாக்குகளை) பதிவு செய்யத் தகுதியுடையவர்கள் ஆவார்கள். தொலைதூரமின்னணு-வாக்களிப்பு வசதி மூலம் ஏற்கனவே வாக்களித்த உறுப்பினர்களும் AGM-ல் கலந்து கொள்ளலாம், ஆனால் AGM-ல் மீண்டும் தங்களது வாக்கை (வாக்குகளை) பதிவு செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மின்னணு-வாக்களிப்பு செயல்முறையை (தொலைதூர மற்றும் கூட்டம் நடைபெறும் இடத்தில் வாக்களிப்பு) நேர்மையான மற்றும் வெளிப்படையான முறையில் ஆய்வு செய்வதற்காக, பிராக்டிசிங் கம்பெனி செயலாளர், சென்னை, திரு. சுப்பிரமணியன் சந்திரசேகர், (FCS எண் 6773; CP எண் 13761) அவர்கள் ஆய்வாளராக ("Scrutinizer") நியமிக்கப்பட்டுள்ளார்.

மின்னணு முறையில் வாக்களிப்பதற்கான வசதி / கூட்டத்தில் பங்கேற்பது தொடர்பான ஏதேனும் குறைகள் இருப்பின், உறுப்பினர்கள் www.evoting.nsdl.com என்ற இணையதளத்தின் பதிவிறக்கப் பிரிவில் பங்குதாரர்களுக்காகக் கிடைக்கும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் மின்னணு-வாக்களிப்பு பயனர் கையேட்டைப் பார்க்கவும் அல்லது 022 - 4886 7000 என்ற எண்ணுக்கு அழைக்கவும் அல்லது இது தொடர்பான கோரிக்கையை திரு. கோபாலகிருஷ்ணன் A, மேலாளர், நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL), 3-வது தளம், நமன் சேம்பர், ஜி பிளாக், ப்ளாட் எண் 32, பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (கிழக்கு), மும்பை - 400 051 அவர்களுக்கு Gopalakrishnan.A@nsdl.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்கள் / பதிவேடுகள், இந்த அறிவிப்பு விநியோகிக்கப்பட்ட தேதியிலிருந்து உறுப்பினர்களால் எந்த கட்டணமுமின்றி மின்னணு முறையில் ஆய்வு செய்யக் கிடைக்கும்படி செய்யப்படும். அத்தகைய ஆவணங்களை ஆய்வு செய்ய விரும்பும் உறுப்பினர்கள் தங்களது பெயர், DP ID / Client ID மற்றும் பிற தேவையான விவரங்களைக் குறிப்பிட்டு secretarialdragarwal.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் கோரிக்கையை அனுப்பலாம். மேலும், நிறுவனத்தின் ஒரு உறுப்பினராக, வருடாந்திர அறிக்கையின் அச்சிடப்பட்ட நகலை (physical copy) இலவசமாகப் பெறுவதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது. அதனைப் பெற நீங்கள் விரும்பினால், தயவுசெய்து உங்கள் கோரிக்கையை விவரங்களுடன் மேற்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு நிறுவனத்திற்கு அனுப்பவும், அது உடனடியாக உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

தொலைதூரமின்னணு-வாக்களிப்பு மூலம் தங்களது வாக்கை (வாக்குகளை) பதிவு செய்தல், AGM-ன்போது மின்னணு-வாக்களிப்பு, அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு பங்குகளைப் பெற்று நிறுவனத்தின் உறுப்பினர்களாக மாறிய நபர்கள் உள்நுழைவு ஐடி (login ID) மற்றும் கடவுச்சொல்லை (password) எவ்வாறு பெறுவது மற்றும் மின்னணு முறையில் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கான செயல்முறை குறித்த விரிவான வழிமுறைகளுக்கு AGM அறிவிப்பைப் பார்க்குமாறு உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

காணொளி காட்சி (VC) / பிற ஆடியோ காட்சி வழிமுறை (OAVM) மூலமாக நடைபெறும் நிறுவனத்தின் மேற்கூறிய பதினாறாவது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்க தாங்கள் வசதி ஏற்படுத்திக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இயக்குநர்கள் குழுவின் உத்தரவுப்படி

Dr. அகர்வால்ஸ் ஹெல்த் கேர் லிமிடெட்டுக்காக

ஒப்பம்/–

தணிகைநாதன் ஆறுமுகம்

கம்பெனி செயலாளர் மற்றும் இணக்க அதிகாரி

இடம் : சென்னை

தேதி : ஆகஸ்ட் 29, 2026

திண்டிவனம் கூடுதல் சார்பு நீதிமன்றம்

E.P.No. 64/2019

in

O.S.No.71/2011

திண்டிவனம் நகரம், மரக்காணம் ரோடு, நெ. 57/105ல் வசிக்கும் கண்ணன் குமாரர் அரவிந்த்

... மனுதாரர்/வாதி

எதிர்

வானூர் வட்டம், சின்னக்கோட்டக்குப்பம் கிராமம், வண்ணாரத் தெரு, நெ. 30ல் வசிக்கும் டி.கே.குமார் குமாரர் புவனேஸ்வரி

... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

மேற்படி நெம்பரில் வழக்கில் கண்ட மனுதாரர், எதிர்மனுதாரராகிய தங்கள் பேரில் சமூகம் நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தாக்கல் செய்து, மேற்படி மனுவில் தங்களுடைய சொத்தினை ஏலம் விட Saleக்கு நிலுவையில் உள்ள நிலையில் எதிர்மனுதாரராகிய தங்களுக்கு நீதிமன்றத்திருந்து நோட்டீஸ் சார்வாகும் பொருட்டு பலமுறை படிகட்டப்பப்பட்டது. தங்களுக்கு நோட்டீஸ் சார்வாகாததால் நோட்டீஸ் சார்வாகும் பொருட்டு இந்த அறிவிப்பு கொடுக்கப்படுகிறது. மேற்படி வழக்கில் தாங்கள் ஆஜராக வருகின்ற 07.09.2026 அன்று வாய்தா வைக்கப்பட்டுள்ளது. அன்றையதினம் எதிர்மனுதாரராகிய தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ அன்று காலை 10.00 மணிக்கு கனம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பு செய்யப்படும் என்பதை கண்டிப்பாய் அறியவும்.

J.பெக்ஸ்மகிழன்

வழக்கறிஞர்

மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம் மற்றும் சார்பு நீதிமன்றம், உளுந்தூர்பேட்டை

MCOP No. 152/2025

1.ஜெ. ரூபெல்லா லூர்து ராணி, க/பெ. ஜெயசீலன் (லேட்).

2.ஜெ. இன்பெண்டா வந்தனா, த/பெ. ஜெயசீலன் (லேட்).

3.ஜெ. கிங்ஸ்லி கிஷோர், த/பெ. ஜெயசீலன் (லேட்).

மேற்கண்ட மனுதாரர்கள் வசித்து வரும் முகவரி: நெ. 25/3, சிவ பெருமாள் நகர், 2வது தெரு, பள்ளப்பட்டி, பேகம்பூர் அஞ்சல், திண்டுக்கல் மாவட்டம்–624 002.

....மனுதாரர்கள்

எதிர்

ப. யூசப், த/பெ. பக்கீர் மொஹிதீன். நெ. 1/25, கருணீகர் தெரு, சாலவாக்கம், உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்–603 107.

...1ம் எதிர்மனுதாரர்

முதல் எதிர்மனுதாரருக்கு அறிவிக்கும் நோட்டீஸ்

மேற்படி நெம்பரில் மனுதாரர் கடந்த 10.05.2025 அன்று மனுதாரர்கள் சாலை ஓரமாக நடந்து செல்லும்போது 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN–19–Y–6617 என்ற வாகனத்தால் கடந்த 10.05.2025 தேதி அதிகாலை 2:00 மணியளவில் விபத்து ஏற்பட்டு, அடிப்பட்டு கொடுங்காயமுற்றமைக்கு ரூ.50,00,000/– நஷ்டஈடு ஈட்டுத்தொகை கேட்டு தங்களுக்கு எதிராக மனதாக்கல் செய்து தங்களுக்கு நீதிமன்றத்தின் மூலம் பலமுறை நோட்டீஸ் அனுப்பியும் தாங்கள் நேரில் ஆஜராகாததால் மேற்படி அசல் மனு தற்போது 03.09.2026 தேதியில் வாய்தா வைக்கப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகாவிட்டால் தங்கள் மீது ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பெறப்படும் என்பதை கண்டிப்பாக அறியவும்.

அ. எழில் முருகன்,

வழக்கறிஞர்,

IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE -2 AT VILLUPURAM

M.C.O.P.59/2025

Dr.V.Subburaj, S/o Venkatasamy No.12, Muruga Complex, K.K.Road, Villupuram. Petitioner

Vs

M/s Uddhapa Logistics Pvt Limited Godrej Road, No.312, SIDCO Industrial Estate, Ambattur, Chennai – 600 098. 1st Respondent

அறிவிப்பு

மேற்படி வழக்கின் மனுதாரர் திரு Dr.V.சுப்புராஜ் அவர்கள் 13.09.2024 அன்று காலை சுமார் 07.30 மணிக்கு TN-32-AR-0483 பதிவு எண் கொண்ட வாகனத்தில் பயணம் செய்யும் போது, தங்களுக்கு சொந்தமான TN-13-Y-6663 என்ற லாரியை தங்கள் ஓட்டுநர் B.ராஜேஷ் குமார் என்பவர் மோட்டார் வாகன விதியை மீறி மனுதாரர் சென்ற வாகனத்தின் மீது மோதி அவர் காயமுற்று அதற்காக இழப்பீடு கேட்டு M.C.O.P.59/2025 என்ற எண்ணில் மேற்படி நீதிமன்றத்தில் தங்கள் மீதும், தங்கள் ஓட்டுநர் மீதும் தங்கள் வாகனம் காப்பீடு செய்யப்பட்ட The New India Assurance Company மீதும் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி நீதிமன்றத்தின் மூலமாக தங்களுக்கு அனுப்பப்பட்ட சம்மனை நீங்கள் பெற்றுக் கொள்ளாததால், மேற்படி நீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க இந்த பொது அறிவிப்பு தாங்கள் நீதிமன்றத்தில் 02.09.2026 அன்று காலை 10.00 மணிக்கு தாங்களோ அல்லது தங்கள் வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி ஆட்சேபiz ஏதும் இருந்தால் தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறினால் ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது.

K.Radhakrishnan

மனுதாரர் வழக்கறிஞர்